**Dated : 03.09.2025**

**C.O.S.No. 2/2023**

**PW.1 – திரு. விஜயராம்**

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

எனக்கு வேறு ஏதேனும் பெயர் உள்ளதா என்றால் என்னுடைய பெயர் விஜயராம், வீட்டில் என்னை முருகேசன் என்று அழைப்பார்கள். என்னுடைய Official பெயர் விஜயராம் தான். நான் கட்டுமான தொழில் செய்து வருகிறேனா என்றால் என் மனைவி பெயரில் தான் உரிமம் உள்ளது, ஆனால் அதன் முழு பராமரிப்பும் நான் தான் பார்த்து வருகிறேன். அந்த நிறுவனம் முனிசிபாலிடியில் பதிவு செய்யப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. நான் என்ன படித்துள்ளேன் என்றால் டிப்ளோமா இன்ஞினியரிங் சிவில் மற்றும் எலக்ட்ரானிஸ்க் இரண்டுமே படித்திருக்கிறேன். பாலக்கோட்டில் உள்ள அரசு சுகர்மில் பாலிடெக்னிக் கல்லூரியில் படித்தேன். என்னுடைய நிர்வாகத்தில் எத்தனை பேர் பணிபுரிகிறார்கள் என்றால் நானும், என் மனைவியும் வேலை பார்க்கிறோம், அது மட்டுமல்லாமல் தினக்கூலியாக சுமார் 30 – 40 பேர் பணிபுரிகிறார்கள். வீடு கட்டுமானத்திற்காக புளுபிரிண்ட் நானே தயாரிப்பேனா என்றால் நானே தயாரிப்பேன். அதற்கான மேற்பார்வையை என்னுடைய சகோதரர் பார்த்துக்கொள்வார். என் சகோதரர் பெயர் என்ன என்றால் பாஸ்கரன், அவர் என்ன படித்திருக்கிறார் என்றால் சிவில் இன்ஞினியரிங் படித்திருக்கிறார்.

அந்த நிறுவனம் தற்போதும் இயங்கி வருகிறதா, தற்போது எந்த முகவரியில் இயங்குகிறது என்றால் சென்னை சாலை கே.ஆர்.சி. காம்ளக்ஸில் உள்ளது. நான் ஜி.எஸ்.டி. வரி செலுத்துகிறேனா என்றால் செலுத்துகிறேன், அதற்கு எண் உள்ளதா என்றால் உள்ளது. ஜி.எஸ்.டி. எண் கூற இயலுமா என்றால் தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறேன். நான் எத்தனை வருட காலங்களாக இந்த தொழிலை செய்து வருகிறேன் என்றால் கிட்டதட்ட 17 வருட காலங்களாக செய்து வருகிறேன். ஜி.எஸ்.டி. 10 வருட காலங்களாக செய்கிறேன். ஜி.எஸ்.டி. சுவேதா பில்டர்ஸ் என்ற பெயரில் தான் இயங்கிவருகிறது. நான்

எத்தனை கட்டுமானம் செய்திருக்கிறேன் என்றால் சுமார் 50 கட்டுமானங்கள் செய்திருக்கிறேன். நான் 50 கட்டுமானங்களையும் முழுமையாக முடித்திருக்கிறேனா என்றால் எல்லா கட்டுமானங்களையும் முடித்திருக்கிறேன். வேறு பிரச்சனையின் காரணமாக கட்டுமானம் பாதியில் நிறுத்தப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை.

வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me in open Court interpreted/read to the witness and acknowledged by him/her to be correct.

LATHA V R    Digitally signed by LATHA V R

Principal District Judge,
Krishnagiri.